# District Collector received award from
## Hon'ble President of India Shri Pranab Mukherjee &
## Minister of Human Resource Smt. Smriti Zubin Irani
# for the best performance in
# Karkum bharatham Project









முதன்மைக் கல்வி அலுவலகம்,
தருமபுரி.
09.09.2015.

# பத்திரிக்கைச் செய்தி

தருமபுரி மாவட்டம்
'கற்கும் பாரதம்' திட்டத்திற்கு சிறந்த செயல்பாட்டிற்கான குடியரசுத் தலைவர் விருது

தருமபுரி மாவட்ட 'கற்கும் பாரதம்' திட்டம் அகில இந்திய அளவில் சிறந்த மாவட்டமாக தேர்வு பெற்றது. இவ்விருது உலக எழுத்தறிவு தினமான 08.09.2015 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் திரு.பிரனாப் முகர்ஜி மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி.ஸ்ம்ருதி இராணி அவர்களால் வழங்கப்பட்டது. இவ்விருதினை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன் அவர்களும், தருமபுரி மாவ்டட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.கே.பி.மகேஸ்வரி அவர்களும் பெற்றுக் கொண்டனர். தருமபுரி மாவட்டத்தில் இருந்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.A.விமலன் மற்றும் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. E.K.மாதையன் ஆகியோரும் சென்றிருந்தனர். இவ்விருதினை பெற்று வந்த முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி கே.பி.மகேஸ்வரி அவர்கள் கூறும் போது தருமபுரி மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களில் உள்ள 251 கிராம ஊராட்சிகளில் 251 மையங்களில் கற்கும் பாரதம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் 2 மையப் பொறுப்பாளர்கள் வீதம் மொத்தம் 502 பேர் பணிபுரிகின்றனர். இம்மையங்களில் 15 முதல் 35 வரை உள்ள எழுத படிக்க தெரியாதவர்களுக்கு எழுத்தறிவு கற்பிக்கப்படுகிறது. 2010 கணக்கெடுப்பின்படி 288536 பேர் எழுத படிக்கத் தெரியாதவர்கள் எனக் கண்டறியப்பட்டது. அவர்கள் அனைவரையும் மேற்காண் 251 மையங்களில் சேர்ப்பிக்கப்பட்டு கற்பிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு இதுவரை 9 முறை தேர்வு நடத்தப்பட்டு 282090 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மீதி உள்ளார்கள் தொடர்ந்து மையங்களில் கற்பிக்கப்பட்டு வருகிறார்கள். இம்மையங்களில் கற்பித்தல் பணியோடு தையல் பயிற்சி, சாம்பிராணி தயாரிப்பு பயிற்சி, மெழுகுவர்த்தி தயாரித்தல் மற்றும் எளிய பொருட்களைக் கொண்டு ஆபரணங்கள் செய்யும் பயிற்சி ஆகியவையும் கற்றுத்தரப்படுகின்றன. இதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையும் மேம்படுகிறது. இத்திட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக திரு.A.விமலன் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். இவருடன் திரு.E.K.மாதையன் மற்றும் ஒன்றிய பொறுப்பாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்விருது இத்திட்டத்தில் பணிபுரியம் அனைத்து பணியாளர்களின் ஒட்டு மொத்த செயல்பாட்டின் மூலம் கிடைத்தது எனவும் இதற்கு காரணமான அனைவரையும் பாராட்டுவதாக முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்தார். இவ்விருதினை பெற்று வந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்களையும் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.கே.பி.மகேஸ்வரி அவர்களையும் மாவட்டக் கல்வி அலுவலர் திரு.ஆர்.நடராஜன், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் திரு.D.கணேசன், உதவி மாவட்டத்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.எம்.சுப்பிரமணியன், நேர்முக உதவியாளர்கள் திரு.இராஜா, திரு.கோவிந்தசாமி, கல்வித் துறை அலுவலர் பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் திரு.சையத்வாகித், திரு.முருகேசன், மற்றும் கல்வித் துறை பணியாளர்கள் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி